# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1415/17 - 2005 ඔක්තෝබර් 19 වැනි බදාදා - 2005.10.19

1415/17 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.– பீ.21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

24அ (1) ஆம்பிரிவின் கீழான கட்டளை

இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் இக்கட்டளையின் மூலம் –

(1) கலை, மானிடவியல், சமூக அறிவியல் என்பனவற்றின் உயர் கல்வியை வழங்குதல், ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கத்திற்கு 2005, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து உயர்தரக் கற்கை நிலையமொன்றைத்தாபிக்கின்றேன் ; அத்துடன்

(2) அத்தகைய நிலையத்திற்கு "மானிடவியல் மற்றும் அறிவியலில் உயர்தரக் கற்கைக்கான தேசிய நிலையம்" என்னும் பெயர் மகுடத்தைக் குறித்தொதுக்கின்றேன்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.
சனாபதி.

கொழும்பு,
2005, ஒற்றோபர் 10.

ச.வ. – பீ.21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின்16ஆம் இலக்க கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு.

கொழும்பு,
2005, செத்தெம்பர் 22.

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மானிடவியல் மற்றும் சமூக அறிவியலில் உயர் கற்கைக்கான தேசிய நிலையம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2005 செத்தெம்பர் 21 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் 'சட்டம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 24அ என்னும் பிரிவின்கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட 2005, ஒற்றோபர் 10 ஆந் திகதிய கட்டளையால் தாபிக்கப்பட்ட மானிடவியல் மற்றும் சமூக அறிவியலில் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் (இதனகத்துப்பின்னர் 'நிலையம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடையத்தாதல் வேண்டும்.

3. பிரிவு 24அ என்பதன்கீழ் ஆக்கப்பட்ட மேற்கூறிய கட்டளை வலுவுக்கு வருவதன் மீது நிலையமானது இடையறா வழியுரிமையும் அக்கட்டளையால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர் மகுடத்தையும் கொண்டதும் முழுத் தத்துவமுடையதுமான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றுவதற்குமான தத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

4. நிலையத்தின் குறிக்கோள்கள் பின்வருவனதாதல் வேண்டும் :

(1) முனைப்பான சிந்தனையையும் புத்தாக்கக் கற்பனைகளையும் ஊக்குவித்தலும் பேணிக்காத்தலும் தேசிய மட்டத்திலும் விசேடமாக பல்கலைக்கழக முறைமைக்குள்ளும் நிலையத்தின் நோக்கெல்லைக்குட்பட்ட துறைகளில் ஆக்கத்திறனையும் தனிமூலாதாரத்தையும் புலப்படுத்தும் ஆராய்ச்சிக்கு ஆதரவளித்தலும் ;

(2) புத்தறிவையும் உயர்தர கற்பனைகளையும் உள்ளேற்பதற்கான தேசிய ஆற்றலைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்தல் ;

(3) வெளிநாட்டு மற்றும் உள்ளூர்ப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் பல்கலைக்கழக முறைமைக்கு வெளியிலிருந்தும் கல்விமான்களினதும் வேறு தனித்துவம் பெற்றவர்களினதும் வழிகாட்டுதல்களினதும் மேற்பார்வையினதும் கீழ் இதனையொத்த சர்வதேசக் கீர்த்திபெற்ற கற்கை மற்றும் ஆராய்ச்சி நிலையங்களினால் அவற்றின் அந்தந்தத்துறைகளில் வழங்கப்படுவனவற்றுடன் ஒப்புநோக்கப்படற்பாலதான மட்டங்களில் பட்டப்பின் கற்கைகளுக்கும் பயிற்சிக்கும் வாய்ப்புக்களை வழங்குதல் ;

(4) மனித வளங்களின் உற்பத்திக்கும் நிலையத்தின் நோக்கெல்லைக்குட்பட்ட எல்லாத் துறைகளிலும் கல்வி மற்றும் உயர்தொழில்சார் தனித்துவத் தன்மைகளின் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்தல் ;

(5) நிலையத்தின் நோக்கெல்லைக்குட்பட்ட துறைகளில் வெளிப்படும் கல்வி மற்றும் உயர் தொழில்சார் சமுதாயங்களின் அக்கறைகளையும் ஆற்றல்களையும் நிறைவு செய்தல்.

5. நிலையம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(1) இணையுறுப்பினர்களையும் சிரேஷ்ட இணையுறுப்பினர்களையும் நியமித்தல் ; இவர்கள் நிலையத்தின் உறுப்பினர்களாக இருப்பர் ; அத்துடன் நிலையத்திற்கு அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஊதியமற்ற தன்மையில் மதியுரை வழங்குதலும் துணைபுரிதலும் வேண்டும் ;

(2) சிரேஷ்ட இணையுறுப்பாளர்களைக் கொண்டிருப்பதற்கு ; இவர்கள் சிரேஷ்ட இணையுறுப்பாளர்கள் எனக் கூட்டாகக் குறிப்பீடு செய்யப்படுவர் ; அத்துடன் இவர்கள் இடையீட்டு அடிப்படையில் செயற்படுவதுடன் அவர்களது மதியுரை மற்றும் கல்விசார் பணிகளைக் கூட்டாக நிறைவேற்றுவதற்கும் காலத்துக்குக் காலம் கூடுவர் ;

(3) ஆராய்ச்சி மானியங்களால் ஆதரிக்கப்பட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு காலத்துக்குக் காலம் ஆராய்ச்சி இணையுறுப்பினர்களையும் ஆராய்ச்சிக் கல்விமான்களையும் நியமிப்பதற்கு ;

(4) எவையேனும் அங்கீகரிக்கப்பட்ட கற்கைக் கிளைகளில் பட்டப்பின் பாடநெறிகள் உட்பட கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தலும் அத்துடன் அப்பாடநெறிகளுக்குத் தேர்வுநாடிகளைத் தெரிவு செய்வதற்கும் அனுமதியளிப்பதற்கும் ;

(5) பரீட்சைகளை நடத்துவதற்கு ;

(6) நிலையத்தில் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிகழ்ச்சித் திட்டங்களைப் பின்பற்றி துணை விதிகளால் விதித்துரைக்கப்பட்ட நிலையத்தின் பரீட்சைகளில் சித்தியடைந்துள்ள ஆட்களுக்குப் பட்டங்களையும் திப்ளோமாக்களையும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் அளிப்பதற்கு ;

(7) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வேறு பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஆசிரியர்களையும், மாணவர்களையும் கல்விமான்களையும் பரிமாற்றம் செய்வதில் ஒத்துழைப்பதற்கு ;

(8) நிலையத்தின் முகாமைப் பேரவையினால் விதந்துரைக்கப்பட்டு முதுகலைஞர் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களுக்கு கௌரவப் பட்டங்களையும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் அளிப்பதற்கு ;

(9) நிலையத்தின் இணையுறுப்பினர்களுக்கும் சிரேஷ்ட இணையுறுப்பினர்களுக்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் அத்துடன் ஊழியர்களுக்கும் ஒழுக்காறை வலுவுக்கிடுதலும் அவர்களின் நலம் பேணலுக்கு ஏற்பாடு செய்வதற்கு ;

(10) ஏதேனும் அறவீட்டிற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கு அல்லது துணைவிதிக்கிணங்க ஏதேனும் கட்டணம் அறவிடுவதற்கு ;

(11) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக்குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு, குறிக்கோள்களையும் செயல்நுட்பங்களையும் தரும் கூட்டிணைப்புத் திட்டமொன்றையும் வகுத்துத்தொகுப்பதற்கு ;

(12) நிலையத்தின் ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் பரிச்சியப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்துவதற்கு ; அத்துடன்

(13) நிலையத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு வியடங்களைச் செய்வதற்கு.

6. நிலையத்தின் அதிகாரிகள் பின்வருவோராதல் வேண்டும் :–

(அ) முதுகலைஞர் பேரவை ;

(ஆ) முகாமைத்துவப் பேரவை ;

(இ) கல்விசார் கூட்டவைகளும்அத்துடன் கற்கைச் சபைகளும்.

7. (1) முதுகலைஞர் பேரவையானது, நிலையத்தின் கொள்கையை வகுக்கும் பிரதான குழுவாதலும் ஆளும் அதிகார சபையாதலும் வேண்டும்.

(2) முதுகலைஞர் பேரவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) அரசுத் தலைவர் ;

(ஆ) ஆணைக்குழுவின் தவிசாளர் ;

(இ) முகாமைத்துவப் பேரவையின் தவிசாளர் ;

(ஈ) பணிப்பாளர் ;

(உ) அந்தப் பட்டதாரிக் கல்விப்பீடங்களின் அல்லது வளாகங்களின் அல்லது நிறுவனங்களின் பிரதான அல்லது பாரிய கல்விசார் கற்கை, நெறிகள், கலை, மானிடவியல், சமூக அறிவியல், சட்டம் மற்றும் கல்வி போன்ற துறைகளுக்குட்பட்டுள்ளனவோ அந்தப் பட்டதாரிக் கல்விப்பீடங்கள், வளாகங்கள் அல்லது நிறுவனங்கள் உட்பட ஏதேனும் பீடத்தின் துறைத் தலைவர், பணிப்பாளர் அல்லது வளாகத் தலைவர் ;

(ஊ) துணைவேந்தர்களினதும் பணிப்பாளர்களினதும் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நான் துணைவேந்தர்கள் ; இவர்கள் இப்பந்தியின் வேறு உட்பந்திகளின்கீழ் முதுகலைஞர்களின்பேரவை உறுப்பினர்களாக அல்லாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பல்கலைக்கழகங்களிடையே ஒவ்வொ மூன்று ஆண்டுகளும் சுழற்சி முறையில் நியமிக்கப்படுதலும் வேண்டும் ;

(எ) கலை, மானிடவியல், சமூக அறிவியல், சட்டம், கல்வி ஆகிய துறைகளில் அல்லது சார்புடைய துறைகளி பிரபல்யமான ஆட்களிடையேயிருந்து முகாமைத்துவப் பேரவையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நான் உறுப்பினர்கள் ;

(ஏ) கலை, மானிடவியல், சமூக அறிவியல், சட்டம், கல்வி ஆகிய துறைகளில் அல்லது சார்புடைய துறைகளி பிரபல்யமான ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்க

(ஐ) கலை, மானிடவியல், சமூக அறிவியல், சட்டம், கல்வி ஆகிய துறைகளில் அல்லது சார்புடைய துறைகளி பிரபல்யமான ஆட்களிடையேயிருந்து சிரேஷ்ட இணையுரிமையாளர் கல்லூரியால் பெயர் குறித்து நியமிக்கப்ப நான்கு உறுப்பினர்கள், ஆயின் எவ்வாறாயினும் இதன்கண் குறித்துரைக்கப்பட்ட முதலாவது நான் உறுப்பினர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மூன்று ஆண்டுகளைக் கொண்டவொ காலப்பகுதிக்கு அல்லது முதுகலைஞர் பேரவையின் முதலாவது கூட்டத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக் முன்பதாக அல்லாதவொரு காலப்பகுதிக்குள் "சிரேஷ்ட இணையுரிமையாளர் கல்லூரி" முறைய அமைத்துவாக்கப்படும்வரை, இதில் எது முன்னராக நிகழ்கின்றதோ அதுவரை நியமிக்கப்படுவர்.

(3) அரசுத் தலைவர் கலைஞர் பேரவையின் தவிசாளராதல் வேண்டும் ; இவர் முதுகலைஞர் பேரவையின் எல்லா கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அரசுத் தலைவரால் கூட்டமொன்றுக்குத் தலைமைதாங் இயலாதிருப்பின், சமூகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கெ தங்களிடையேயிருந்து உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட முதுகலைஞர் பேரவையின் உறுப்பினர் எவரும், அவ முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அவரது நியமன அல்லது பெயர்குறித்து நியமனத் திகதியிலிருந்து மூன் ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி தாங்குதல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந் அகற்றப்பட்டாலன்றி மீள் நியமனத்திற்கு அல்லது பெயர் குறித்த மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராத வேண்டும்.

நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவரது பதவிக்காலம் முடிவடைவதற் முன்னர் அவரது பதவியை வறிதாக்குமிடத்து அவரைப் பின்னுறுபவர் அவரது பதவியை முன்ன வறிதாக்கினாலன்றி, அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தி முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிதாங்குதல் வேண்டும்.

(5) முதுகலைஞர் பேரவையின் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அத்தகை உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த குழுவுக்குப் பிரதியொன்றுடன் நிலையத்தின் பணிப்பாளருக் முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் ;

(6) முதுகலைஞர் பேரவையின் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் ஏதேனு காரணத்திற்காக முதுகலைஞர் பேரவையின் அடுத்தடுத்துவரும் மூன்றுகூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருப்பின் அவ முதுகலைஞர் பேரவையின் உறுப்பினரொருவராக பதவியை வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டு என்பதுடன் நியமனம் செய்யும் அல்லது பெயர்குறித்து நியமனம் செய்யும் குழுவானது பதவியை வறிதாக்கி உறுப்பினரின் இடத்திற்கு வேறோர் ஆளைவிடயத்திற்கேற்ப நியமித்தல் அல்லது பெயர்குறித்து நியமித்தல் வேண்டு

(7) முதுகலைஞர் பேரவையின் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆணைக்குழுவா அங்கீகரிக்கப்பட்டவாறு ஏதேனும் ஊதியத்திற்கு அல்லது படிக்கு உரித்துடையவராதல் வேண்டும் ;

(8) முதுகலைஞர் பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையி மூன்றிலொன்றாதல் வேண்டும் ;

(9) முதுகலைஞர் பேரவை அவசியமானபோது கூடலாம் ; ஆயின், எவ்வாறாயினும் ஒவ்வொராண்டும் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும் ;

(10) முதுகலைஞர் பேரவையின் தவிசாளர் அவசியமானதென அவர் கருதும் போதெல்லாம் அல்லது முதுகலைஞர் பேரவையின் மொத்த உறுப்பான்மையில் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரிடமிருந்து அதன் சார்பில் எழுத்திலான வேண்டுகோள் அவரால் கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒரு வாரத்திற்குள் முதுகலைஞர் பேரவையின்விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் ;

8. நிலையத்தின் பதிவாளரே முதுகலைஞர் பேரவையின் செயலாளராதல் வேண்டும்.

9. முதுகலைஞர் பேரவை இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிலையத்திற்குரித்தாக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக்குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

10. பேரவையானது 5ஆம் பந்தியினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(அ) நிலையத்தின் செங்கோல் ஒன்றையும் பொது இலச்சினையையும் தெரிவு செய்வதற்கும் அது விரும்பியாங்கு அவற்றை மாற்றுவதற்கும் ;

(ஆ) முதுகலைஞர் பேரவையால் விதிந்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு கௌரவப் பட்டங்களை அல்லது வேறு கல்விசார் சிறப்புப்பட்டங்களை அளிப்பதற்கு ;

(இ) கொள்கை சார்ந்த முடிபுகளை எடுப்பதற்கும் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட துணைவிதிகள் தொடர்பில் ஏதேனும் கருமம் பற்றி துணைவிதிகளை ஆக்குவதற்கும் ;

(ஈ) நிலையத்தின் குறிக்கோள்களை எய்துதல் தொடர்பில் எந்தத் தத்துவங்களின்பிரயோகம் இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சாதனத்தில் வேறு வகையில் ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்த வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கு ; அத்துடன்

(உ) ஏதேனும் கல்விசார்ந்த, நிதிசார்ந்த அல்லது நிர்வாகக் கருமம் தொடர்பில் ஏதேனும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ;

11. (1) முகாமைப்பேரவை, நிலையத்தின்நிர்வாக மற்றும் கல்விசார் அதிகார சபையாதல் வேண்டும்.

(2) முதலாவது முகாமைப் பேரவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இக்கட்டளைச்சட்டத்தின் திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அல்லது II (3) ஆம்பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு முகாமைப் பேரவை தாபிக்கப்படுகின்றவாறான அத்தகைய காலம்வரைஇடைக்கால முகாமைப் பேரவையாகப் பணியாற்றுதலும் வேண்டும்.

(3) முகாமைப் பேரவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) பணிப்பாளர் ;

(ii) எந்தப் பட்டக் கல்விப் பீடங்களின், வளாகங்களின் அல்லது நிறுவகத்தின் பிரதான கல்விசார் கற்கை நெறிகள் கலை, மானிடவியல், சமூக அறிவியல், சட்டம் அத்துடன் கல்வி ஆகிய துறைகளுக்கு உட்படுகின்றனவோ அந்தப் பட்டக் கல்விப் பீடங்கள், வளாகங்கள் அல்லது நிறுவகம் உட்பட ஏதேனும்பீடத்தின் துறைத் தலைவர், பணிப்பாளர் அல்லது வளாகத் தலைவர் ;

(iii) நிலையத்தின் கற்கைச் சபை ஒவ்வொன்றினதும் தவிசாளர் ;

(iv) சார்புடைய துறைகளிலுள்ள பிரபல்யமான ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்.

(4) முகாமைப் பேரவையின் தவிசாளர் கலை, மானிடவியல், சமூக விஞ்ஞானம், சட்டம், கல்வி ஆகிய ஏதேனும் துறையிலுள்ள பிரபல்யமான ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிதாங்குதல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து, அல்லது பதவிதுறக்குமிடத்து அல்லது சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக, அடுத்தடுத்து முகாமைப் பேரவையின் மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்க இயலாதிருக்குமிடத்து அவரது இடத்திற்கு வேறோர் ஆள் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(6) முகாமைப் பேரவையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் அதன் மெத்த உறுப்பாண்மையின் நாலிலொன்றாதல் வேண்டும்.

(7) முகாமைப் பேரவையானது நிலையத்தின் நிர்வாகத்தின் மீதும் கல்வியையும் ஆராய்ச்சியையும் பரீட்சைகளையும் நடாத்துதல் மீதும் பொதுக் கட்டுப்பாட்டையும் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் 11(7) ஆம் பந்தியால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் முகாமைப் பேரவை பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(அ) நிலையத்தின் பதிவாளரது கட்டுக்காப்பில் இருக்க வேண்டிய நிலையத்தின் பொது இலச்சினையின், பொது இலச்சினையின் பயன்பாட்டைப் பணிப்பதற்கும் நிலையத்தின் செயலாளரினதும் பதிவாளரினதும் அத்துடன் இவர்களுள் எவரேனும் ஒருவர் இல்லாதபட்சத்தில் அதன்பொருட்டு பணிப்பாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரினதும் முன்னிலையிலன்றி பொது இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது என்பதை அறுதிப்படுத்துவதற்கும்;

(ஆ) கற்கை சபையிடமிருந்து அல்லது கற்கை சபைகளிடமிருந்து அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு;

(இ) கற்கைச் சபையிடமிருந்து அல்லது கற்கைச் சபைகளிடமிருந்து விதப்புரைகள் கருத்திற்கௌ்ளப்படுவதன்மீது பரீட்சகர்களை நியமிப்பதற்கு;

(ஈ) கற்கைச் சபையுடனான கலந்தாலோசனையுடன் ஆசிரியர் பதவிகளையும் வேறு கல்விசார் பதவிகளையும் நிறுவுவதற்கு, ஒழிப்பதற்கு அல்லது இடைநிறுத்தல் செய்வதற்கு;

(உ) பின்வருவனமீது கற்கைச் சபையிடமிருந்து அல்லது கற்கைச் சபைகளிடமிருந்து அறிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு;

(i) உளதாம் கற்கைச் சபையை அல்லது கற்கைச் சபைகளை மீளொழுங்கமைப்பதற்கும் அத்துடன் புதிய கற்கைச் சபையை அல்லது கற்கைச் சபகைளை ஒழுங்கமைப்பதற்குமான செயற் திட்டங்கள்; அத்துடன்

(ii) அந்தந்த கற்கைச் சபைக்கு அல்லது கற்கைச் சபைகளுக்கு கற்கைப் பாடங்களைக் குறித்தொதுக்குவதற்கு;

(ஊ) முதுகலைஞர் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின்மீது இணையுறுப்புகளையும் புலமைப் பரிசில்களையும் ஏழைக்கல்வி உதவிகளையும் பதக்கங்களையும் வேறு பரிசுகளையும் அளிப்பதற்கு;

(எ) அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினதான குழுக்களை நியமிப்பதற்கும் அதன் பணித்துறை நியதிகளைக் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அவற்றின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கும் அத்தகைய அறிக்கைகளை திரிபுபடுத்துதல்களுடனோ அல்லாமலோ அங்கீகரிப்பதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும்;

(ஏ) கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அநுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை முதுகலைஞர் பேரவைக்கு விதந்துரைப்பதற்கும்;

(ஐ) நிலையத்தைச் சார்ந்த ஆட்களின் பொது நலன்பேணலுக்கும் வசதிகளுக்கும் ஏற்பாடு செய்வதற்கும் ஒழுங்குவிதியால் அல்லது துணைவிதியால் விதித்துரைக்கப்பட்ட வேறேதேனும் நிர்வாகப் பணிபயைப் புரிவதற்கும்;

(ஒ) நிலையத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் நிர்வகிப்பதற்கும்;

(ஓ) முதுகலைஞர் பேரவைக்குத் திட்டவட்டமாகக் குறித்தொதுக்கப்பட்டவைகளைத் தவிர, இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிலையம் தொடர்பான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் நிர்மாணிப்பதற்கும்;

(ஔ) குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கென நிதியத்திற்குக் கிடைக்கச் செய்யப்பட்ட ஏதேனும் நிதியை நிர்வகிப்பதற்கும்;

(க) நிலையத்தின் நோக்கங்களுக்கான ஆதனத்தின் இறுதிவிருப்பிவனைக் கையளிப்புகளையும் நன்கொடைகளையும் மானியங்களையும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும்;

(ங) அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை கொள்வனவு என்ற வகையில் அல்லது வேறு வகையில் கொள்ளுவதற்கு;

(ச) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை, அத்தகைய ஆதனம் எந்தச் சட்டத்தால் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தால் நிலையத்திற்கு உரித்தாக்கப்பட்டதோ அந்தச் சட்டத்தின் அல்லது தோதான சாதனத்தின் ஏதேனும் மட்டுப்பாட்டிற்கு, நிபந்தனைக்கு அல்லது தடைவிதிப்பதற்கு அமைய விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு, கொடுத்துமாற்றுவதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கு;

(ஞ) நிலையத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் பரிசீலனை செய்வதற்கும் அத்துடன் அத்தகைய அறிக்கைகளையும் அத்தகைய கணக்குகளையும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கும்;

(ட) நிலையத்தின் நிதிசார்ந்த மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கும் அத்தகைய மதிப்பீட்டை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கும்;

(ன) நிறுவகத்தின் பணியைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்களையும் வளவுகளையும் தளபாடங்களையும் உபகரணங்களையும் வேறு பொருட்களையும் ஏற்பாடு செய்வதற்கும்;

(த) நிலையத்தால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களை நியமிப்பதற்கு, இடைநிறுத்தம் செய்வதற்கு, பதவி நீக்கம் செய்வதற்கு அல்லது வேறு வகையில் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு;

(ந) நிலையத்தின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கும் ஏதேனும் பிரயோகிக்கப்படாத வருமானம் உட்பட, நிலையத்திற்குரிய எவையேனும் பணங்களை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏதேனும் பிணையத்தில் முதலீடு செய்வதற்கும்.

12. (1) நிலையத்தின் முகாமைப் பேரவைக்கும் பணிப்பாளருக்கும் அலுவலர்களுக்கும் நிர்வாக மற்றும் ஒழுங்கமைத்தல் சார்ந்த கருமங்கள் மீது மதியுரை வழங்கும் நோக்கங்களுக்காக நிலையத்தின் முகாமைக் குழுவொன்று தாபிக்கப்படலாம்.

(2) முகாமைக் குழுவின் தத்துவங்களுக்கும் அதன் அலுவல்களை நடாத்துவதற்கான நடவடிக்கை முறையும் ஒழுங்குவிதியில் அல்லது துணை விதியால் விதித்துரைக்கப்படலாம்.

13. (1) முகாமைப் பேரவைக்கு கற்கைச் சபைகளால் ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்கள்மீது அதற்கு மதியுரை வழங்கும் நோக்கத்திற்கென நிலையத்தின் கல்விசார் கூட்டவையொன்றிருத்தல் வேண்டும்.

(2) கல்விசார் பேரவை பின்வருவோரைக் கொண்டித்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; இவர் கல்விசார் கூட்டவையின் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) கற்கைச் சபை ஒவ்வொன்றினதும் தவிசாளர்களும் ஒவ்வொரு சபையிலுமிருந்து வேறு இரண்டு நியமத்தர்களும் ;

(இ) எண்பிக்கப்பட்ட கல்விசார் திறமை படைத்த முதுகலைஞர் பேரவையின் மூன்று உறுப்பினர்கள் ;

(ஈ) ஆணைக்குழுவிலிருந்து மூன்று நியமத்தர்கள் ; இவர்கள் (ஆ) மற்றும் (இ) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களிலிருந்து தனித்தியங்குதல் வேண்டும்.

14. (1) முகாமைப் பேரவை வெவ்வேறு கற்கைநெறிகளுக்கும் துணைக் கற்கை நெறிகளுக்கும் இடையீட்டுக் கற்கை நெறிகளுக்கும் கற்கை சபைகளைத் தாபித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கற்கைச் சபைகளின் அமைப்பு முறையானது துணை விதியால் விதித்துரைக்கப்பட்டவாறாயிருத்தலும் வேண்டும்.

(2) ஏதேனும் கற்கைச் சபையின் தவிசாளர் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கற்கைச் சபையொன்று பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும் ;

(i) அதற்கு முகாமைப் பேரவையால் ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தைப் பரிசீலனை செய்தலும் அதன் மீது அறிக்கையிடுதலும் ;

(ii) முகாமைப் பேரவையின் கட்டுப்பாட்டிற்கு அமைய கற்பித்தல், பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பிலான விடயங்களை ஒழுங்குபடுத்துதல் ;

(iii) கற்கைச் சபையில் கற்கைப் பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பில் எல்லா விடயங்கள்மீதும் விதப்புரைகள் செய்தலும் முகாமைப் பேரவைக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தலும் ;

(iv) துணை குழுக்களின் உறுப்பினர்களின் நியமனத்திற்கு முகாமைப் பேரவைக்கு விதப்புரை செய்தலும் பணித்துறை நியதிகளை விதித்துரைத்தலும் அவர்களுக்கான படிகளைத் தீர்மானித்தலும் ; ஏதேனும் விசேட விடயப்பொருளை அல்லது எவையேனும் விசேட விடயப்பொருள்களை பரிசீலனை செய்து அதன்மீது அறிக்கையிடும் நோக்கத்திற்கு அத்தகைய துணைக்குழுக்கள் சபையின் உறுப்பினர்கள் தவிர்ந்த வேறு ஆட்களையும் உள்ளடக்கலாம் ; அத்துடன்

(v) பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களை முகாமைப் பேரவைக்கு விதந்துரைத்தல்.

15. நிலையத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும் :

(1) பணிப்பாளர் ;
(2) பதிவாளர் ;
(3) நிதியாளர் ;
(4) நூலகர் ; அத்துடன்
(5) கட்டளைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிக்கும் எவரேனும் ஆள்.

16. (1) (அ) பணிப்பாளர் நிலையத்தின் முழுநேர அலுவலரொருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிலையத்தின் முதலாவது பணிப்பாளர் ஆணைக்குழுவால் மூன்றாண்டுகளைக்கொண்டவொரு காலப் பகுதிக்கு நியமிக்கப்படுதலும் வேண்டும். எவரேனும் அடுத்துறும் பணிப்பாளர் முதுகலைஞர் பேரவையால் விதந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களிலிருந்து ஆணைக்குழுவால்

நியமிக்கப்படுதல் வேண்டும். ஆயினும் அப்பெயர்கள் தாபிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடடிவடிக்கை முறையினூடாக விதந்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆளெவரும் அடுத்தடுத்த இரண்டு தவணைகளுக்குமேல் நிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது.

(இ) நிலையத்தின் பணிப்பாளர் அகற்றலுக்கான உரிய நடைமுறையைப் பின்பற்றி ஆணைக்குழுவால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(ஈ) பணிப்பாளர் உயர்கல்வி நிறுவனமொன்றின் தலைவர் ஒருவரின் அந்தஸ்த்துக்குச் சமமான அந்தஸ்த்தைக்கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் நிலையத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரும் பிரதான கல்விசார் அலுவலரும் பிரதான கணக்கீட்டு அலுவலராதலும் வேண்டும். இவர் நிலையத்தினுள் ஒழுக்காறைப் பேணுவதற்குப் போறுப்புடையவராவார்.

(3) இக்கட்டளைச் சட்டத்தினதும் எவையேனும் தோதான சாதனங்களினதும் ஏற்பாடுகளுக்கு முறையாகப் பயனளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அதன்பொருட்டு முதுகலைஞர் பேரவையால் தமக்குக் காலத்துக்கு காலம் சட்டமுறையாக வழங்கப்படக்கூடியவாறான பணிப்புகளை நடைமுறைப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும். என்பதுடன் அந்நோக்கத்திற்கு அவசியமானவை என அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றையும் பிரயோகிக்கலாம்.

(4) பணிப்பாளர், அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அல்லது 16(1) (இ) என்னும் பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப் பட்டாலன்றி மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் லீவு காரணமாக, சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக தமது பதவிக்குரிய கடமைகளை ஐந்து நாட்களுக்கும் கூடுதலானவொரு காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருப்பின் அத்தகைய இயலாமை ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் ஆணைக்குழு அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தோதானதென அது கருதுகின்றவாறான அத்தகைய தற்காலிக ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(6) பணிப்பாளர் ஓய்வு பெறுபவராயின், பதவி துறப்பாராயின் அல்லது வேறு காரணங்களுக்காக மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவோரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதிருப்பாராயின் அந்த மூன்று மாதங்கள் முடிவுறுவதன்மீது அப்பதவி வறிதானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) பணிப்பாளரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுமாயின் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆளொருவர் நிரந்தரமாக நியமிக்கப்படும் வரை ஆணைக்குழு, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

17. (1) நிலையத்தின் முழுநேர அலுவலரொருவராக இருக்கவேண்டிய பதிவாளர், ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட விதிகளால் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புச் செயற்திட்டத்துக்கும் நியமனத்திற்கான நடவடிக்கை முறைக்கும் இணங்க முகாமைப் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நிலையத்தின் பதிவேடுகளினதும் ஆதனத்தினதும் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும். இவர் நிலையத்தின் உதவிக் கணக்கீட்டு அலுவலராதலும் வேண்டும்.

(2) பதிவாளர், பணிப்பாளரின் பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய நிலையத்தின் பொது நிர்வாகத்திற்கும் கல்விசாரா பணியாட்டொகுதியினரின் ஒழுக்காற்று கட்டுப்பாட்டிற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

18. (1) நிலையத்தின் முழுநேர அலுவலர் ஒருவராக இருக்க வேண்டியவாரான நிதியாளர் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செயற்திட்டத்திற்கும் நியமனத்திற்கான நடவடிக்கை முறைக்கும் இணங்க முகாமைப் பேரவையால் நிமிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியாளர் பதிவாளரின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தவராதல் வேண்டும் என்பதுடன் நிலையத்தின் நிதிகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும். இவர் நிதியத்தின் நிதிகளின் கட்டுக்காப்பைக்கொண்டிருத்தல் வேண்டும்.

19. (1) நிலையத்தின் முழுநேர அலுவலரொருவராக இருக்கவேண்டியவாரான நூலகப் பொறுப்பாளர் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் நியமனத்திற்கான நடவடிக்கை முறைக்கும் இணங்க முகாமைப் பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) நூலகப் பொறுப்பாளர், பணிப்பாளரின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தவராதல் வேண்டும் என்பதுடன் நிலையத்தின் நூலகத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும்.

20. (1) நிலையம் பட்டங்களை அளிப்பதற்கு ஒவ்வோராண்டுக்கு ஒருமுறை முதுகலைஞர் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் பட்டமளிப்பு விழாக்களை நடாத்துதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும் நிலையம், முதுகலைஞர் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தில் விசேட பட்டமளிப்பு விழாவொன்றை நடத்தலாம்.

(2) பட்டமளிப்பு ஒன்றுக்கான நடவடிக்கைமுறை துணைவிதிகளால் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(3) சனாதிபதி பட்டமளிப்பு விழாவொன்றிற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். அவர் சமுகமாயில்லாதவிடத்து முகாமைப் பேரவையின் தவிசாளர் அத்தகைய பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

21 (1) நிலையத்தின் பணியாட்டொகுதி நிலையத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் திறம்படப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அவசியமானதெனக் கருதப்படுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் பாகம் V இன் ஏற்பாடுகள் நிலையத்தின் பணியாட்டொகுதியின் நியமனங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

22. நிலையத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

23. (1) இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மானிடவியல்" மற்றும் சமூக அறிவிலில் உயர்தரக் கற்கைளுக்கான தேசிய நிலைய நிதியம் என அழைக்கப்படும் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இதற்கு எத்தன்மையதுமான மூலவளங்களலிருந்து கிடைக்கப்பெறும் எலலாப் பணங்களும் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) வருமானத்தின் தோதான தலைப்புகளின்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டவாறு ஒவ்வொரு காலாண்டுப் பகுதிக்குள்ளும் நிதியத்திற்கு செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளினதும் பொழிப்பொன்று எதிர்வரும் மாதத்தின் முடிவுக்குள் பணிப்பாளரால் ஆணைக்குழுவுக்கு அதன் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

24. பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் :

(1) நிலையத்தின் கணக்குகள் முதுகலைஞர் பேரவையால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பேணப்படுவதனை உறுதிப்படுத்துதல் ;

(2) நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் பெறுதலும் அத்தகைய பணங்களை கணக்குகளின் தக்கத் தலைப்புகளின்கீழ் வரவுவைத்தலும் ;

(3) அதிகாரமளிக்கப்பட்ட எல்லா கொடுப்பனவுகளையும் செய்தல் ;

(4) ஆணைக்குழுவால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய மதிப்பீடுகளையும் எதிர்வரும் ஆண்டின் ஆண்டு நிதி ஒதுக்கீட்டையும் முதுகலைஞர் பேரவைக்காத் தயாரித்தல்.

25. (1) நிலையம், ஆண்டுக்கணக்குக் கூற்றொன்றையும் அதன் செய்றபாடுகள் தொடர்பிலான புள்ளிவிபரங்களையும் ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிலையத்தின் கணக்குப் புத்தகங்களை நிலையத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

26. உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடைத்தான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் பாகம் என்பதன் ஏற்பாடுகள் நிலயத்தின் கணக்குகளின் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

27. இக்கட்டளைச் சட்டத்தால் நிலையத் தொடர்பான ஏதேனும் கருமம் தொடர்பில் ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிரா்தவிடத்து 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் இயைபான ஏற்பாடு அத்தகைய விடயங்கள் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

28. நிலையத்தின் செயற்பாட்டிற்கு முதனிலை ஆயத்தத்தை மேற்கொள்கையில், அதிகார சபைகள் முறைப்படி அமைத்துருவாக்கப்படுகின்றதும் அத்தகைய அலுவலர்கள் முறையாக நியமிக்கப்படுகின்ற அல்லது தேர்ந்தெடுக்கப்படுகின்ற அத்தகைய காலம்வரை முதலாவது பணிப்பாளர் நிலையத்தின் எல்லா அதிகார சபைகளினதும் அலுவலர்களினதும் அத்தகைய எவையேனும் அல்லது எல்லாத் தத்துவங்களையும் கடமைகளயும் பணிகளையும் தாமாகவோ அல்லது அந்நோக்கத்திற்கென ஆணைக்குழுவால் தாபிக்கப்பட்ட உளதாம் கட்டமைப்பின் ஊடாகப் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம்.

29. இக்கட்டளைச் சட்டத்தில் -

"சட்டம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும் ;
"தோதான சாதனம்" என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
"அமைச்சர்" என்பது உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்று பொருள்படும்.

11-35/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.